கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
தமிழ்நாடு,சென்னை-35.

*****

முன்னிலை: திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.

ந.க.எண்.29390/சி4/2021 நாள்: 21.03.2022.

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு- கருவூலக் கணக்குத் துறை - திரு.T.பத்மநாபன், இளநிலை உதவியாளர், தருமபுரி மாவட்ட கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை ஆணைகள். |
| பார்வை: | 1.தருமபுரி மாவட்டக் கருவூல அலுவலர், அவர்களின் செயல்முறை ஆணை எண்:4720/2016/அ1, நாள்:27.05.2019. |
| | 2.அரசாணை (நிலை) எண்:48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை, நாள்:26.02.2021. |
| | 3. தருமபுரி மாவட்டக் கருவூல அலுவலர், அவர்களின் கடிதம் ந.க.எண்:4720/2016/அ1 நாள்:12.08.2021 மற்றும் 01.02.2022. |

*******

ஆணை:

தருமபுரி மாவட்ட கருவூல அலகில் அரூர் சார்நிலைக்கருவூலத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 08.03.2015-அன்று பணியிலிருக்கும் போது இயற்கை எய்திய திரு.அ.தீத்தான் என்பவரின் வாரிசுதாரர் திரு.T.பத்மநாபன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பத்ததைத் தொடர்ந்து அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூல அலுவலர், தருமபுரி அவர்களின் செயல்முறை ஆணையின் படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டு தனியர் தருமபுரி மாவட்ட கருவூல அலகிலுள்ள அரூர் சார்நிலைக்கருவூலத்தில் இளநிலை உதவியாளராக 29.05.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை-2ல் காணும் அரசாணையின் பத்தி 5-ல் உள்ள (5.1),(5.2)-ல் முறையே 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of *Rules)* மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும் எனவும், சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higer than the appointing authority),அவரவர் கட்டுப்பட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings)வெளியிடலாம் என வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு பார்வை-3-இல் காணும் தருமபுரி மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் கருத்துருவினை ஏற்று கருணை அடிப்படையிலான பணிநியமனம் பெற்று இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு.தீ.பத்மநாபன், இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான பணிநியமனம் மற்றும் அப்பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும் திரு.T.பத்மநாபன் அவர்களின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு -28-இன் உட்பிரிவு (1)-ன்படி அன்னார் பணியேற்ற நாளான 29.05.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

3....

மேலும், தனியர்பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் **துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும் ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் தனியரின் பணிவரன்முறை குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.**

**தி.ந.வெங்கடேஷ்**
**கருவூலக் கணக்கு ஆணையர்.**

**பெறுநர்:**

1. திரு.தீ.பத்மநாபன்,
   இளநிலை உதவியாளர்,
   மாவட்டக்கருவூலம்,
   தருமபுரி.
   (உரிய அலுவலர் மூலமாக)
2. கருவூல அலுவலர்,
   மாவட்டக்கருவூலம்,
   தருமபுரி.
3. இருப்புக்கோப்பு./உதிரி.

**//ஆணைப்படி அனுப்பலாகிறது//**

**கண்காணிப்பாளர்**
24/3/2022.

24/3/22

மாவட்டக்கருவூலம்,
தருமபுரி.

மே.கி.ந.க. எண்: 4720/2016/அ1 நாள்: 04.04.2022

நகல் சார்வு செய்யப்படுகிறது.

கருவூல அலுவலர்
தருமபுரி. 4/4/22

பெறுதல்

உதவிக் கருவூல அலுவலர்,
சார்நிலைக் கருவூலம்,
அரூர்.

மே.கு.க. எண்:- 617/2022/அ1/ நாள் 5.4.22

நகல் தனியருக்கு சார்பு செய்யப்படுகிறது.

05.4.22
உதவிக் கருவூல அலுவலர்
அரூர்.

பெறுதல்:-

திரு. கி. பத்மநாபன்,
இ.ரு.உ., சா.க.,
(ப)
அரூர்.